பெற்றோர் பெருமை

இஃது

பிரம்மஸ்ரீ. வரகவி.

திரு. அ. சுப்ரமண்ய பாரதியாரியற்றிய

ஒரு வ்யாஸம்.

ஸ்ரீ பாலசுப்ரமண்யம் கம்பெனி,

2/30, ஹைரோட்,

திருவல்லிக்கேணி, சென்னை.

1915.

[Price 0—1—0

தெய்வ மகிமை.

தெய்வத்தின் மகிமையை விளக்கிக்காட்டும் ஒரு வியாஸம். பிரம்மஸ்ரீ வரகவி. திரு. அ. சுப்ரமண்ய பாரதி [illegible]

...மூட்டிக்
...ர் சிறு
...அ. சுப்
வெகு

...முதலிய
...காசாரி
...ச்ரமத்
...பதும்,
...மென்
...நக்கின்
...ஸ். சுப்
...நக்கின்
...வ அய்
...ிகளும்
...பிருக்கி
...ழுதப்

விலாசம்:

ஸ்ரீபாலசுப்ரமண்யம் கம்பெனி,

திருவல்லிக்கேணி, சென்னை.

உ

செந்திலாண்டவன்

திருவடி துணை.

பெற்றோர்பெருமை.

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்.

குழந்தைகளே! இந்தச் சிறுவாக்கியத்தை நெடுநாட்களுக்குமுன்னமே நாம் அறிவோம். நெடுங்கணக்குப் படித்தபின், தனிமொழிகளையும், தொடர்மொழிகளையும் அதன் பின்பு சிறுவாசகப் பாடங்களையும் படித்து, ஔவையார் அருளிச்செய்த நீதிநூற்றிரட்டுப் படிக்கத் தொடங்கி முதலில் "ஆத்திசூடி" என்ற சிறு நூலைப் படித்தோம். அதன் மேல் கொன்றை வேந்தன் என்னும் நூலைப்படித்தோம். அந்தநூலின் முதலாவதுவாக்கியமே இதுவாம். அப்பொழுது நாம் அந்தவாக்கியத்தின் அர்த்தத்தை நன்றாய் ஆராய்ந்து படிக்கவில்லை. புத்தகத்தில் எழுதியிருந்த சிறிய பதவுரையைப் படித்து ஒப்புவித்துவிட்டு, இவ்வளவுதான் இதன் பொருளும் பயனுமென்று எண்ணி யிருந்தோம். இப்பொழுது நாம்பெருநூல்களிற் பழகி நமது புத்திசற்று விசாலப்பட்டிருப்பதனால் அந்த வாக்கியத்தின்பொருளை நன்றாய் ஆராய்ந்து புணர்ப்போம்.

அவ்வாக்கியத்துக்கு அர்த்தமென்னை தாயும் தாதையும் ஆகிய (இருவரும்) முதலில் அறியத்தக்க (அல்லது) அறியப்படுகிற தெய்வமாகின்றார்கள் என்பதே. நம்மைப் போன்ற மனிதசரீரம் உடைய அவ்விருவரும் நமக்குத் தெய்வமாவதெப்படி? அவர்களையும் நம்மையும் படைத்துப் பரிபாலித்து வருபவரும் ஏகநாயகனாகிய சர்வேசுவரன் ஒருவனிருக்கையில் இவர்களைத் தெய்வமென்று வழிபடுவது பாபமாகாதோ என்றால் ஆகாது. நமது அன்னையாராகிய ஒளவையார் சிறுவருக்கென்றே அந்நூலைச் செய்ததில்லை. மற்றும் சிறியார் பெரியார் யாவருக்கும் உபயோகமாகும்படி தர்மம், அர்த்தம், காமம், மோட்சம் என்னும் நால்வகைப் பொருள்களையும் அந்தச் சிறிய நூலில் அடக்கி உலகத்தாருக்கு உபகரித்திருக்கின்றார்கள். அந்நூலில் சிலவாக்கியங்கள் இம்மைக்குரியன. சில மறுமைக்குரியன. சில இம்மை மறுமை யிரண்டுக்குமுரியனவாய் மோட்சந்தருவனவுமாயுள்ளன. நாம் முன் குறிப்பிட்டவாக்கியம் இந்த மூன்றாவது வகுப்பிற்சேர்ந்தது. ஆதலால் அதைநாம் அவசியம் விசாரித்து அறியவேண்டியது. அதையோசிப்போம்.

தெய்வவிசுவாசமில்லாத நாஸ்திகர்களுக்கு இந்த வசனத்தினால் பெரும்பயனில்லை. தெய்வநம்பிக்கையுடைய ஆஸ்திகர்களாகிய நமக்கே முழுவதும் பிரயோசனப்படுவதாகும். ஆஸ்திகர்களுக்குள்ளும் வேறுபட்ட பல கொள்கையருண்டு. அவர்கள் நம்மைப்போலப் பெற்றோரைத் தெய்வமாக மதியாவிட்டாலும் நாம்வணங்

கர்த்தர்கள் எல்லாரையும் விட மேலானவர்களாக
மதித்து வணங்கும்படியான கொள்கையுடையவர்கள்.
ஆரியர்களாகிய நாமோ அவர்களை நமக்கு உலக இன்பத்தை
உண்டிக்கும் மாதாபிதாக்களாகவும், பரலோகமோட்சா
நந்தங்களை அளிக்கும் தெய்வமாகவும் கருதி வழிபடுகி
றோம். ஆனால் இப்பொழுது, காலவித்தியாசத்தாலும்,
பலவிதமான அநாரியர் சகவாசத்தாலும் நமது முன்னோர்
கொள்கைக்கு மாறுபட்டு மாதாபிதாக்களைச் சத்துருவா
கப் பாவிக்கின்றோம். இது கலியுக மகிமை என்பர்
மூதறிவாளர். தாய் தந்தையரைத் தெய்வ மாகக்
கருதுவானேன் என்றால் அது ஒரு நல்ல கேள்வி
தான். அது விசாரிக்கக்கூடியதே. ஆஸ்திகராயுள்ளவர்
கள் எல்லாரும் தெய்வத்தின் சுபாவத்தையும், அதை அறி
ந்து அடையும் மார்க்கத்தையும் மற்றவர்களுக்கு விளக்
கிக்காட்டுவதற்கு ஒரு குரு அவசியம் வேண்டுமென்
றே கூறுகின்றார்கள். இதை எந்த மதஸ்தரும் மறுக்க
மாட்டார்கள். அந்தக் குருவும் சகல சாஸ்திரங்களை
யுங்கற்றறிந்து, தெய்வ இலட்சணத்தை உள்ளபடி தெரிந்
துகொண்டு, தேவனால் அருளிச்செய்யப்பட்டிருக்கிற
வேதங்கூறிய நெறியில் நிற்பவராயிருக்கவேண்டும். அப்
படி இல்லாதவர்கள் குருவாகார் என்பார்கள். அது வாஸ்
தவமே. ஆனாலும் நமது வேதங்கூறிய நெறி நின்ற ஆரி
யப்பெரியோர்கள் கண்டறிந்த சித்தாந்தமாவது—தெய்
வமென்பது நுட்பமானவைகளுக்கெல்லாம் நுட்பமா
னது. அணுவுக்கும் அணுவாயிருப்பது. கண் மனம்

முதலிய அறிகருவிகளுக்கும் எட்டாதிருப்பது. என்றால் கண் முதலிய இந்திரியங்களாலும் மனதாலும் அறியப் படாத அதிசூட்சுமப்பொருளாம். அது தனக்கென்று ஒரு சொரூபமில்லாதது; ஆனாலும் பக்தாநுக்கிர கார்த்த மாக அநந்த சொரூபங்களை யெடுத்துக்கொள்ளும் போரா ற்றலுடையது. ஏனென்றால், சொரூபமில்லாததும், ஒன் றாலும் அறியப்படாததுமானால் ஒன்றுக்கும்பிரயோசன மில்லாத சூனியப்பொருளாகுமே. ஆகையால் தன் இச சையால் பக்தர் இச்சித்தபடி சொரூபமெடுத்துக்கொண் டிலங்கி அநுக்கிரகம்செய்யும் வல்லமையுடையது. இன் னதன்மையான இலட்சணத்தையுடையதென்று வாக்கி னால் சொல்லக்கூடாதது. என்றால் உலகத்தில் அதற்குச் சமானமான அல்லது மேலான பொருள் ஒன்றுமில்லை யாகையால் என்பது. சுவாநுபூதியில் அறியத்தக்கது என்றால், உலகம் கடந்த பக்தர்களுடைய பெரிய ஞான அறிவிலே தோன்றத்தக்கது. அப்படியானால் அதை யறி வதுதான்எப்படி? அதற்குச் சொரூபந்தான் என்ன?என் றால் முதலாவது கேள்விக்கு விடை நாமியற்றியுள்ள தெய்வமகிமையில் விரிவாய்க்கூறப்பட்டிருக்கிறது. இரண் டாம் கேள்வியைக் கவனிப்போம்.

வேதங்களிலே தெய்வத்துக்குப் பல சொரூபங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. அந்தச்சொரூபங்களே சிலா விக்கிரகங்களாகவும், சொர்ணம் முதலிய விக்கிரகங்களாக வும் செய்யப்பட்டு நமது தேவாலயங்கள் தோறும் விள

ங்கிக்கொண்டிருப்பன. அதன் விவரம் மேலே பேசப்படும்; பின்னும் குரு லிங்க சங்கமம் என்கிற மூவகைச்சொரூபங்கள்கூறப்பட்டன அவற்றுள் லிங்கம்என்பதுமேற்குறித்த விக்கிரகசொரூபந்தான். குரு என்பது வேதங்கூறிய மார்க்கத்தில் நடந்து, தெய்வலட்சணத்தை உள்ளபடி தெரிந்துகொண்டு, முறைதவறாமல் ஆராதித்துத் தெய்வத்தன்மையை யடைந்து பிறருக்கு உபதேசிக்கிற பெரியோர்களது திருவுருவமேயாம். சங்கம வடிவமாவது— தெய்வத்தினிடத்தில் இடையறாத பக்திசெலுத்திவருகிற மெய்யடியார்களுடைய திருவுருவமாகும். சங்கம வடிவத்தினிடத்தில் பத்தி செலுத்துவது எல்லாருக்கும் எளியதன்று. குருவுருவமே யதற்குரியது; ஏனென்றால் தனக்கொரு பொருளை உபதேசிப்பவனிடத்தில் பயபக்தி விசுவாசம் வைப்பது எல்லாமனிதருக்கும் சகஜம். ஒரு மனிதன் எவனுவதொருவனிடத்தில் ஒரு பொருளைக் கேட்டுத்தெரிந்துகொண்டால், கற்றுக்கொடுத்தவனை அலட்சியஞ்செய்வது எந்தமதஸ்தருக்கும் இயல்பல்ல. அப்படி அலட்சியஞ்செய்கிறவனை மிருகத்தன்மையுடையவனென்றுயாவரும் வெறுப்பார்கள். "எழுத்தறிவித்தவனிறைவனுகும்" என்ற முதுரையும் இந்தக் கருத்தையே விளக்க எழுந்தது. நமது ஆரியோத்தமர்கள் ஒரு எழுத்தை உபதேசித்தவனைக்கூடத் தெய்வமென்று நினைக்கும் பெருந்தன்மையுடையவர்கள். ஏனென்றால் இதில் ஒரு இரகசியமுண்டு. அதாவது அறிவு என்பதே கடவுளுக்கு இயல்பான சொரூபமென்று நமதுவேதம் சொல்

கின்றது; அவ்வறிவை யுடைய ஜீவாத்மாவையுந் தெய்வமென்றே நினைக்கவேண்டுமென்பது ஆரியசித்தாந்தம். நமக்கு ஒன்றை அறிவித்தவன், அதையறியாதிருந்த நம்மை விடமேலானவனல்லவா? அறிவே தெய்வத்துக்குரிய சொரூபமானால் அவனிடந் தெய்வத்தன்மை அதிகமாகவிளங்குகிறதென்று கருதவேண்டும். ஓர் எழுத்தையுபதேசித்தவனையே இப்படி நினைக்க வேண்டியதானால் சகல கலைகளையும் உபதேசித்த குருவை யெப்படி நினைக்கவேண்டியது? அவனே மேலான தெய்வமென்று நாம் வணங்கவேண்டியது உசிதமல்லவா? இப்பொழுது சொல்லப்பட்ட குருமார்கள் எல்லாரும் அநித்தியமான பொருளை உபதேசித்தவர்கள். அநித்தியமான பொருள்களின் இலக்கணங்களை முழுதும் அறிந்து உபதேசிப்பதற்கே அவனிடம் தெய்வவிளக்கம் இருக்கவேண்டும்; இல்லாவிட்டால் அவன் ஒன்றையும் உணரமாட்டான். இதனது விபரங்களெல்லாம் இச்சிறு நூலில் அடங்காதாகையால் வேறு நூலில் எழுதுவோம். உலகப்பொருளை யறிவதற்கே தெய்வத்தன்மை வேண்டுமானால் உலகத்துக் கெட்டாமலிருக்கிற பரம் பொருளை யறிந்து உபதேசிக்கும் அந்தக்குரு தெய்வமாகவே யிருக்கவேண்டும் என்பது நிச்சயம். தெய்வ உண்மையை அறிவதற்குத் தெய்வத்தன்மையே வேண்டும். இல்லாவிட்டால் அதை ஒருபொழுது மறியக்கூடாது. அதை யறிந்தவனையே நமது பெரியோர்கள் ஞானி என்பார்கள். ஞானி என்றால் பேரறிவுடையவனென்று அர்த்தம். மற்

றுபவர் எல்லாரும் ஞானியல்ல. அறிஞர் என்னப்படு
வார்கள். பேரறிவுடைய ஞானியாகிய குருவையே தெய்
வமாகவழிபட வேண்டுமென்பது வேதசம்மதம். அவ
னே முக்கியமான குரு. மற்ற குருமார்கள் அவ்வளவு
சிறந்தவர்கள் ஆகார்கள். இவ்வளவு தூரம் சொல்லிவந்
ததனால் தாய்தந்தையர் தெய்வமாவார்களென்பது விளக்
கப்படவில்லையே யென்றால், அப்படியல்ல; அதைவிளக்கு
வதற்காகவே யிவ்வளவு தூரம் சொல்லிவந்தோம். எப்ப
டியென்றால் சொல்லுவோம்.

நமது ஆரியர்கள் கொண்ட விவாக சம்பந்தமென்பது
புறத்தேசத்தாரும், புறமதஸ்தரும் கொண்டது போல
உலக இன்பத்தை அனுபவிப்பதற்காக அல்ல. சற்சந்
தான விருத்தியைக் குறித்தே. சற்சந்தானமாவது ஞா
னியாகிய புத்திரனாகும். இந்த விவாக விஷயம் முற்றும்
கற்புடைமையைப்பற்றிப் பேசுமிடத்தில் விவரித்தெழுத
ப்படும். நிற்க, ஞானியாகிய புத்திரர் புத்திரிகளைப் பெற்
று அவர்களால் உலகத்தில் ஆஸ்திகமத உண்மையை நிலை
றுத்தி, யாவரையும் மோட்சானந்தத்தில் மூழ்கச் செய்ய
வேண்டுமென்பதே ஆரியர்கள் கொள்கை. வெகுகாலந்
தவமிருந்து அப்படிப்பட்ட புத்திரோற்பத்திக்குரிய கால
தேசகுண தோஷங்களைச் சோதிட முதலிய சாஸ்திரங்க
ளால் நிச்சயித்தறிந்து கர்ப்பாதான முதலிய வைதிகசற்க
ருமங்களைச் செய்து அறிவிற்சிறந்த குழந்தைகளைப்
பெறுவது வழக்கம். இங்கு யோசிக்கத்தக்கது இது!
அறிவே சொரூபமாக இருக்கப்பட்ட ஆத்மாவானது

நிர்மல சரீரியாயிருக்கிற தகப்பனிடத்தில் ஜீவசக்தியைப்
பெறுகிறது. பின் தாயின் கர்ப்பத்தில் பிரவேசித்துச்
சரீரத்தைப் பெறுகிறது. சரீரமாவது அந்தக்கரணங்கள்
ஞானேந்திரியங்கள், மனம் முதலிய அறிகருவிகள், கரு
மேந்திரியங்களாகிய தொழிற்கருவிகளுமான அவயவப்
பகுப்புகளோடுங் கூடிய ஒரு பிண்டம். அறிகருவிகள்
உலகப்பொருள், உலகங்கடந்த பரம் பொருளாகிய
இரண்டையும் அறிவதற்குரியன. அவற்றையறிவதற்
குரிய சாதனமாக நிற்பன தொழிற்கருவிகள். இச்சரீர
மில்லாவிட்டால் ஜீவாத்மா ஒரு பொருளையுமறியாது.
மனமாதி அறிகருவிகளில்லாமல் ஜீவாத்மா ஒன்றையும்
அறியாதென்பதை ஒருவரும் மறுக்கத்துணியமாட்டார்
கள். அப்படிப்பட்ட அறிகருவிகள் எங்கிருந்து கிடை
தன? அருமையான மாதாவின் சரீரத்திலிருந்து. தான்
சாதனப்பொருளாகிய கரசரணாதி அவயவங்கள் எங்கே
யிருந்து வந்தன? மாதாவின்சரீரத்திலிருந்துதான். அறி
வுள்ளதான மென்று சிலரால் சொல்லப்படும் மூளையென்
னும் சிறந்த அறிகருவி எங்கேயிருந்து வந்தது? நமது
தாயின் திருமேனியிலிருந்துதான். குழந்தைகளே! நீங்கள்
உங்களுடையதென்று நினைத்து இறுமாந்திருக்கிற சரீரத்
தில் உச்சந்தலைமுதல் உள்ளங்கால் வரைக்குமுள்ள அவய
வங்கள் ஒவ்வொன்றையும் இப்படியே விசாரித்துப்பாருங்
கள். அப்பொழுது உங்களுக்குச் சொந்தமான சரீர
மொன்றும் இல்லாமற்போகும். அவைகளெல்லாம் தாய்க்
கே சொந்தமும் உங்களுக்கு இரவலுமாம். ஆகையால்

தாயே நமக்குத் தன் சரீரத்தைக்கொடுத்து இகபர ஆநந்த போகங்களைக் கொடுத்தருளும் பரமகுருவாக விருக்கின்றுள் என்பது நிச்சயமாகத் தெரியவரும். இன்னம் சற்று யோசிப்போம். இவ்விதமான சரீரத்தைக் கொடுத்தருளி யுபகாரம் செய்ததும் ஒரு பெரிதல்ல வென்றுலும் பாருங்கள், நாம் கர்ப்பாசயத்திலிருந்த பொழுது நமது அருமைத் தாய் நம்மாலே பட்ட பாட்டை நாம் அறியா விட்டாலும் உலகத்தில் மற்றத்தாய் மார்கள் படுகிற கஷ்டத்தை யறியக்கூடுமல்லவா? நிற்க வும், உட்காரவும், படுக்கவும் கூடாமல் கஷ்டப்பட்டதெத்தனை? அன்னந்தண்ணீர் ஆகாராதி நித்திரையில்லாமல் பட்டபாடு எத்தனை? இடையில் நேர்ந்த வியாதிகளெத்தனை? மரணுபாயகரமான விபத்துக்களெத்தனை? இவ்வளவு பெரிய கஷ்டங்களை நம்மால் அநுபவித்தும் நமது தாய் நம்மேலே அணுவளவாவது த்வேஷம் வைத்ததுண்டோ? நம்மைப் பெற்றவுடனே நமதன்னைக்குண்டான ஆநந்தம் அளவிலடங்குமோ? அது நிற்கட்டும்; நம்மைப் பெற்றபின் நமக்குச் சரீரத்தைக் கொடுத்ததே போதுமானது என்று நினைத்துத் தூரத்தில் போட்டுவிட்டாளோ? இல்லை; நமது சரீரம் பலப்படும்படியாகத் தனது சரீரத்திலுள்ள சத்தாகிய பாலைக்கொடுத்து எத்தனை காலம் போஷித்தாள்? நாம் வியாதிப்பட்டகாலத்தில் தனது சுகத்தைச் சிறிதும் நினையாமல் அன்னபானுதிகளையும் வெறுத்து நமக்காக எவ்வளவு பாடுபட்டாள்? கண்ணை இமை காப்பதுபோல நமக்கொரு துன்பமும்

3505

உண்டாகாதபடி பாதுகாக்கும் நிமித்தம் பட்டபாடு சொல்லமுடியுமோ? இப்படி நம்மைக்காக்கும் நிமித்தம் கஷ்டப்பட்டதனாலே அவள் தெய்வமாவதெப்படியெ னில், நமது கருவி காரணாதி சரீரத்தைக்காத்து வளர்த் தித்தாள்? நம்மிடத்தில் உண்டான கருணையினாலேதான் இங்ஙனே ரகசியம் இது. கருணாகரன் என்று தேவனுக் கொருபெயர். அதாவது கருணையையே சொரூபமாக வுடையவன் என்பது. கடவுளின் சொரூபமாகிய அறி வையுடைய குருவைக் கடவுளாகக் கருதுவதுபோலக் கருணையையுடைய தாயையுந் தெய்வமாகக் கருதுவது இங்கே சிறந்தது. அதனால் தெய்வத்தின் கருணையை சக்தி என்றும், அதைப்பெண்பாலாகச் சொல்வதும் நமது முன்னோர்கள் அபிப்பிராயமாவதன்றியும், வேத நிச்சயமுமாகும். அந்தக்கருணையையே ஸ்ரீபார்வதிதே வியார் என்றும், ஸ்ரீ இலட்சுமிதேவியாரென்றும், ஸ்ரீஸர ஸ்வதியம்மையார் என்றும் பெரு நூல்கள் கூறுகின்றன. பெண் சொரூபமாகவர்ணிக்கப்பட்ட கருணையாகிய தெய் வசக்தியானதுபெண்களிடத்தில் விசேஷித்திருக்கும் என் பதும் அது தமது குழந்தைகளினிடத்தில் களங்கமற்றுப் பிரகாசிக்கும் என்பதும், அந்தக் களங்கமற்ற கருணையே சொரூபமாக இருந்து குழந்தைகளைப்பெற்று வளர்க் கும் தாய் தெய்வமேயாவாள் என்பதும் சிறந்த இரகசி யம். இதுமட்டும் அல்ல; நமக்கு முதலில் அறிவு புகட் டிய குருவாவதும் தாயேயாம். எவ்வாறென்னில் நாம் குழந்தையாயிருந்த காலத்தில் அன்னபானாதிகளை பருக்

தக்கற்பித்ததும் அன்னையே, நாம் பேசும்படி கற்பித்துக் கொடுத்ததும் அன்னையே, தந்தை முதலியோரை நமக்குத் தெரிவித்ததும் அன்னையே. நன்மை தீமைகளைப் பகுத்து அறிவித்து நன்மைகளைச்செய்து தீமைகளை ஒழிக்கும்படி கற்பித்ததும் அன்னையே. நாம்கல்விபயில்வதன் முன் அறிந்த அறிவெல்லாந் தாயினாலேயே யன்றி வேறல்ல. அறிகருவிகளைத் தந்து அவற்றை விருத்தியாக்கி யறிவைப் புகட்டியதும் கருணை மிகுந்த தாயேயாம்

இனி ஜீவாத்மாக்களுக்கு அறிவைக் கொடுப்பதும் இகபரசுகத்தைக்கொடுப்பதும் தெய்வ உண்மையை யாதென்று விளக்குவதும் தெய்வத்தின் செய்கையேயன்றி மற்றவராலில்லையென்பது வேதத்தின்கருத்து. அதுவே பெரியோர் துணிபுமாகும். அதை விளக்குவதற்கே அவனன்றி ஓரணுவுமசையாது என்று அறிவு முதலியவற்றைக்கொடுப்பது தெய்வமே யாமென்னும் முன்னோர் திருவாக்கு விளங்கிக்கொண்டிருக்கிறது. அந்தத் தெய்வத்துக்குச் சுபாவத்தில் ஒரு சரீரமில்லாமையால் மனிதரைக்காத்து இரட்சிக்க மனிதர்போலவே யெழுந்தருளுமென்று நூல்களெல்லாம் கூறுகின்றன. ஆகையால் நாம் சிறிதும் அறிவில்லாமல் கிடந்த குழந்தைப் பருவத்தில் சருவ வல்லமையுள்ள தெய்வமே மாதா பிதாக்கள் சொரூபமாகி நம்மைக் காப்பாற்றி யறிவு புகட்டிய தென்பதும் நியாயமே. குழந்தைப் பருவத்தில் தெய்வமுண்டென்றும் பாபத்தின் பலன் கஷ்டமாகுமெ

ன்றும், புண்ணியத்தின் பலன் ஆநந்தமாகுமென்றும் பாபபுண்ணிய முண்டென்றும், அந்தத் தெய்வத்தைக் களங்கமற்ற சிந்தையோடுதியானித்தல் வேண்டும் என்றும் அப்படிச்செய்தால் நமக்குத் தெய்வகிருபையுண்டாகுமென்றும் போதித்ததும் நமது தயேயாகும். இப்படியாக நமக்குப் பேருபகாரஞ் செய்து அறிவு புகட்டி யிம்மை மறுமை வாழ்வுகளைக் கொடுத்தருளக் கங்கணங்கட்டிக்கொண்டு முன்னின்ற பரம குருவாவது நம்மிடத்தில் கருணைசொரூபியாக விளங்கிக் கொண்டிருந்த தாயேயாகும். நம்மையீன்று காத்து இரட்சித்து அநுக்கிரகம் புரிந்தருளிய தாயைத் தெய்வமேயாமென்று வணங்குவது ஆரியர்களாகிய நமக்கு ஒருபோதும் குறைவாகாது. அதுவே நமக்குப் பரமபுண்ணியமும், நன்றியறிகயுமாம். தாயால் நமக்கு அநுக்கிரகிக்கப்பட்ட அறிகருவிகளைக் கல்வியாகிய ஞானக்கருவியால் விளக்கி அன்னையருளிய அறிவை விருத்தியாக்கினது தந்தையாகும். தந்தையிடத் திருந்துபெற்றுக் கொண்டது ஜீவசக்தியும் தாயினிடத்தில் பெற்றுக்கொண்டது சரீரமுமாகையால் தந்தையும் தாயுமே ஆத்மாவுக்குச் சகலாதாரமாய் நிற்பவர்கள். அவர்களை விடக் குழந்தைகளுக்கு வேறு தெய்வங் கிடையாது. குழந்தைகட்குத் தந்தையை யறிவிப்பதும் தாயே. தந்தையைக் குருவாகக் கொண்டு மந்திரோபதேசாதிகள் பெற்று நல்வழிப் பட்டுய்யும்படி உபதேசிப்பதும் தாயேயாகையால் முதற்குருதாயேயாம். தாய் அறிவித்த பிறகு தந்தையை அறிந்து வழிபட்டு நன்மை

பெறவேண்டி மாகையால் தந்தை யிரண்டாவது குரு வாகும். இதனாலேயே தாய்தந்தையரை 'இருமுதுகுரவர்' என்று நீதிநூல்கள் புகழ்ந்து கூறியதுமாம். அவ்வி ருவரையும் அலட்சியம் செய்தால், நரகதுன்பம டைவது நிச்சயமென்று நூல்கள் கூறுகின்றன. தெய்வ மே குருவாகும் என்கிற நியாயத்தால் இருமுது குரவரா கிய தாய் தந்தையருந் தெய்வமே யாவார்கள் என்பதிற் சிறிதும் சந்தேகமில்லை. தாயும் தந்தையும் அறிவித்த பின் னரே தெய்வவுண்மையை நாம் தெரிந்து கொள்வதால் மாதாபிதாக்களை "முன்னறிதெய்வம்" என்று நமதன்னை யாராகிய ஔவையார் அவருடைய பெருமையைப் புகழ்ந்து கூறினார்.

தாயானவள் தனக்குத்தெய்வமாய் விளங்குகிற நாய கனை மந்திர தந்திரோப தேசமில்லாமல் சொல்மாத்திரை யால் தன் குழந்தைக்கு உபதேசித்து உண்மை வெளிப் படுத்துவதால், " தாய் சொற்றுறந்தால் வாசக மில்லை" என்றும், தந்தை மந்திரதந்திரமுதலியவற்றால் தெய்வ உண்மையை விளக்குவதால், "தந்தை சொன்மிக்க மந்திர மில்லை" என்றும் ஔவையார் உபதேசித்தருளினார் இத னால் தாய் தந்தையருடைய சொல்லை மீறி நடவாமையே குழந்தைகளுக்குப் பெருந்தவ மாகுமென்றும், அதுவும் பிரதானமான தெய்வவழிபாடாகும் என்றும், தமது அபிப்பிராயத்தை வெளிப்படுத்தி யருளினார். அவ்வாறு கத் தந்தை தாயைத் தெய்வமாக வழிபட்டு மோட்சான ந்தம் பெற்றவர்கள் அளவில்லாதவர்கள் உண்டென்று

பாரதாதிபெரியநூல்கள் நிச்சயித்துரைக்கின்றன. ஆகையால் குழந்தைகளே! நமது தாய்தந்தையருடைய திருவாக்குக்கு எதிர்வார்த்தை கூறுமலும், அவர்களுடையமனங் கோணுமலும் நடக்க முயலவேண்டும். அப்படி நடப்போமானுல் நமக்குத் தெய்வகடாட்சம் தானேகிடைக்கும் என்பது சத்தியம். சுபம்.

௳

ஸநாதன மானவதர்மம் போதிப்பது.

பெற்றோர் பிள்ளைகளின் நன்மையின் பொருட்டுக் காட்டும் பொறுமைக்குத் தக்க பிரதி உபகாரம் அநேக வருடங்கள் முயன்றாலும் செய்வதரிதாம்.

அப்படிப்பட்ட பெற்றோருக்கும் எழுத்தறிவித்த இறைவனாகிய குருவுக்கும் பிரியமானதையே எக்காலத்தும் செய்தல் வேண்டும். தாய் தந்தை குரு ஆகிய மூவரும் மகிழ்ச்சியடைந்தால் தவம் யாவும் சித்திபாம்.

அம்மூவர்க்கும் இயற்றும்பணிவிடையே சிறந்த தவமென்று சொல்லப்படுகின்றது. அவர்கள் அநுமதியின்றி வேறு தர்மமெதையும் செய்வது கூடாது.

எந்தக் கிருகஸ்தன் இம்மூவரிடத்திலும் முறைதவறுதிருக்கின்றானே அவன் மூன்றுலகங்களையும் ஜயிப்பவனுவன். தேவரைப்போல ஸ்வர்க்கத்திலிருந்து ஆனந்தமடைவான்.

தன் ஒழுக்கந் தவறாத அந்த கிருகஸ்தன் தாயினிடத்துக்கொண்ட பக்தியால் இந்த உலகையும் தந்தையிடத்துக் கொண்ட பக்தியால் ஸ்வர்க்கத்தையும் குருவின் சேவையால் பிரஹ்மலோகத்தையும் அடைவான்.

இம்மூவரையும் எவன் ஆதரவு செய்கிறானோ அவன் தர்மங்களையெல்லாம் ஆதரவுசெய்தவனாகின்றான். அப்படி ஆதரவு செய்யாதவனுடைய கிரியைகள் யாவும் வீணாகின்றன

இம்மூவரும் ஜீவித்திருக்கிறவரையில் அவர்களின் சேவையையொழித்து வேறெதையும் செய்தல்கூடாது இகபரலோக நன்மைகளை விரும்பியவன் எப்போதும் இம்மூவருக்கும் பணிவிடை புரிதல் வேண்டும்.

ஒருவன் பரலோகத்திற்குரியதைச் செய்யக்கடவன். அது தாய் தந்தை குரு இம்மூவருக்கும் சம்மதமானதாக இருக்கவேண்டும். செய்யும்போது செய்யும் செய்கையை மனத்தாலும் வாக்கினாலும் செய்கையாலும் அவர்களிடம் தெரிவிக்கவேண்டும்.

முற்றிற்று.

புஸ்தகவிளம்பரம்.

யோகினி ஜாலக்கதை நே. க.

இது போன்ற புத்தகம் இதுவரையில் தமிழில் வெளிவந்திலது. இதில் ஐந்து சிறிய கதைகள் அடங்கியிருக்கின்றன, அவைகளில், தெய்வபக்தி, பிதுருபக்தி, மாதுருபக்தி, சகோதரநேசம், ஜீவகாருண்யம், மதசம்பந்தமான விஷயங்கள், பலவகைநீதிகள் பெண்களுக்குரிய கற்புடைமை முதலிய பலவிஷயமடங்கியிருக்கின்றன. கதைகள் ஒவ்வொன்றும் படிக்கப்படிக்க இனிமையும் சிரிப்பும் உற்சாகமும் தரத்தக்கதாயிருக்கும். வெகு அருமையானது; நூதனமானது; இது ஆங்கிலத்தில் பேரி டேல்ஸ் (*Fairy Tales*) என்பதைப் போன்றது. விலை அணா 4

மனோ ரம்மியமும் ஆச்சரியமும் தரத்தக்க புத்தகங்கள்.

மங்களாம்பாள்

இது படிப்போர் மனதுக்கு இன்பந்தரத்தக்க இனிமையான சரித்திரம். தேனும் பாலும் கலந்ததெனச் சொல்லத்தக்க இனிய நடையிலமையப்பெற்றது. சிறுவர்களும் படித்தறியக்கூடியது: இதில் பக்திரசம், ஜீவகாருண்யம், பொறுமை, தயை முதலிய உத்தமகுண விசேஷங்களும், செல்வச்செருக்குற்றிழிவுறுதல், அகங்காரத்தாலழிதல், நன்றிமறத்தல் முதலாய பல துர்க்குணங்களினால் விளையும் தீங்குகளும், படிப்பவர் நன்குணர்ந்து நல்வழிப்பட்டுய்யுமாறு விளக்கியுள்ளன.

விலை அணா 8.

புத்திமானே பலவான்.

இத்தமிழ் நாவல் இரண்டு சகோதரர்களைப் பற்றிப் பேசுவது: இதனைப்படிக்கும் சிறுவர் சிறுமியர் எக்காலத்தும் எதன் பொருட்டும் தங்கள் சகோதரர்களோடு பகைத்துக்கொள்ளார்களென்பது திண்ணம். இதில் மற்ற நாவல்களில் காணப்படும் பெண் வர்ணனை, காதல் சம்பந்தமான வார்த்தைகள் பெறப்படா? ஆரம்பம் முதல் முடிவுவரை, பொறாமை, கர்வம், டம்பம், பணத்தாசை முதலியவற்றாலுறுங் கேட்டை விளக்கி நல்லோருறவு, தெய்வபக்தி, தாய்தந்தையரைப் பேணுதல் முதலிய நன்மைகளைப் போதிப்பதாகவே யிருக்கும். விலை அணா 6.

பரதன்.

இது மதுர மொழிகளால் சுலப நடையில் யாவரும் எளிதிலுணருமாறு எழுதப்பட்டிருக்கிறது. இந்நூலில் உலக நடைக்குரிய தருமங்களும் ஆன்மலாபத்துக் கடுத்த சாதனங்களும் நன்கு விளக்கப்பட்டிருக்கின்றன. இது படிப்பவர் மனதிற்கு உருக்கமும் இன்னொருமுறை படிக்க வேண்டுமென்கிற உற்சாகமும் தரத்தக்கது. சிறுவர் சிறுமியர் இந்நூலைப்படித்த லவசியம் என்பது ஒருமுறைபடிக்கின் விளங்கும். விலை அணா 4

ஸ்ரீபாலசுப்பிரமணியன் கம்பெனி,
திருவல்லிக்கேணி, சென்னை.

ஜ டா வ ல் ல வ ர்

இரண்டாம் பதிப்பு.

இப்பதிப்பில் சேர்க்கவேண்டியவைகளைச் சேர்த்து, எடுக்கவேண்டியவைகளை எடுத்து இப்புத்தகம் இன்னும் வெகு இனிமையாக எழுதப்பட்டிருக்கிறது.

இது பிர்மஸ்ரீ வரகவி. திரு. அ. சுப்பிரமணிய பாரதியார் எழுதியது. இது ஒரு கிராம முன்சீப்பைப்பற்றிப் பேசும் அருமையான சரித்திரம். இதில் ஜீவகாருண்யம், வரதக்ஷிணையால் விளையும் கெடுதி, சேவகா விருத்தியின் இழிவு, மாமி மருமகளுக்குள் உண்டாகும் வழக்குகள், தம்பதியின் ஒற்றுமை, தெய்வபக்தி, கற்புடைமை, முன்சீப் கணக்கு வழக்குகளை தாசில்தார், டிப்டிகலெக்டர் முதலிய உத்தியோகஸ்தர்கள் பரிசோதிப்பது முதலியனவும், இன்னும் பலவித மான நீதிபோதனைகளும் நன்கு விளக்கப்பட்டிருக்கின்றன. இதனை முக்கியமாக ஒவ்வொரு கிராமமுன்சீபும் வாசிக்க வேண்டியதும் தவிர மற்றெல்லாரும் வாசிக்கவேண்டிய தவசியம். இது ஏற்கனவே ஒவ்வொருவராலும் புகழப்படுகிற படியால் இதைப்பற்றி அதிகம் எழுதவேண்டிய தவசியமில்லை.

விலை ருபா. 1—8—0

ஸ் நே க ல தா

(கதாநாயகிதிக்கிரையான தோற்றத்தின் உருவப் படமொன் றமைக்கப்பெற்றுளது)

வரதக்ஷிணை வாங்குவதுங் கொடுப்பதுங் கெட்டவழக்க மென்பதை உலகுக் குணர்த்தத் தன் உயிரைத் தீக்கிரை யாக்கிய திர ரமணியின் சரித்திரமும் அந்தப் பெண் தன் தந்தைக்குத் தான் உயிரையிழப்பதற்கு முன்னர் எழுதிவைத்த அரிய பெரிய பொருளடங்கிய லிகிதமும் இப்புத்தகத்தில் செவ்வனே எடுத்துக்காட்டப்பட்டிருப்பதோடு ஆரியாசாரம், அதன்மகிமை, அதனையிழந்தவர்களின் கதி, வரதக்ஷிணையால் நேரும் சங்கடங்கள; குதமதி விவாகத்தினுல் விளையும் அனர்த்தங்கள், ஆசாரச் சீர்திருத்தக்காரர்களின் அவலமதியால் உண்டாகும் சீர்கேடு, நவீனநாகரிகர்களின் மூடமதி அதனுல் விளையும் அனர்த்தங்கள், வரதக்ஷிணையை யொழிக்க வழி, பல பத்திரிகைகள் இது சம்பந்தமாய் வெளியிட்டுள்ள கருத்துக்கள், இந்தியாவின் மகிமை, நம் சாஸ்திரங்களின் சிறப்பு, அவற்றை அலட்சியஞ்செய்தலையும் வீணரின் தீய செய்கைகள் ஆகிய இவைகள் நன்கு விளக்கப்பட்டிருக்கின்றன.

விலை அணு 5.

Padmasani or The Lady Detective

பத்மாஸனி

ஓர் அதிசயமான துப்பறியும் நாவல்.

இது லீலா, வரதசுந்தரம், கமலசேகரன், கனகபூஷணம், புஷ்பவனம் முதலிய நாவல்களை எழுதிய ஸ்ரீமான் ஆரணி - குப்புசாமி முதலியார் அவர்களால் எழுதப்பட்டது.

இதில் கூறப்பட்ட கள்ளர்களுடைய சாமர்த்தியங்களும், கதாநாயகி தன் அபாரமான துப்பறியும் சாமர்த்தியத்தாலும் தைரியத்தாலும், அக்கள்ளர்களுடைய குற்றங்களை ருபிக்க ருசுக்கள் கண்டுபிடித்து அவர்களது துர் எண்ணங்களை நிறைவேறவொட்டாமல் தடுப்பதும், ஒரு நிரபராதியின் மேல்வந்த அபாண்டமான கொலைக்குற்றத்தை ருசுப்படுத்தி அவனைச் சிறைமீட்பதும் படிக்க படிக்க ஆநந்தத்தை விளைவிக்கும். வாசிக்க ஆரம்பித்தபின் புஸ்தகம் முடியு மட்டும் இடையில் நிறுத்தமனம் வராது என்பது திண்ணம். புஸ்தகம் நல்ல கிளேஸடிததாளில் அச்சடிக்கப்பட்டு நேர்த்தியான பாப்பர் பயிண்ட்செய்யப்பட்டது. இதன் விலை அணா 10.

The Victory of virtue.

கற்பின் வெற்றி

இப்புத்தகம் நவரசங்களும் அமையப்பெற்று ஸ்திரீபுருஷர்களுக்கு நல்ல நீதியையும் ஒழுக்கங்களையும் போதிக்க சொற்சுவையும் பொருட்சுவையும் நிரம்பப் பெற்றதோர் நாடகம். இடையிடையே இன்பந் தரத்தக்க செய்யுட்களும் ஆன்றோர் அமுதமொழிகளும் விரவியுள்ளன. இப்புத்தக முழுதும் படித்தவர்கள் கடைசியில் “கற்பின் வெற்றி ப்ரதாபத்தையும்” “பாவிகளின்கதி இப்படிமுடியும் போலும்” என்ற ஆச்சரியமான கற்பனையையும் அறிவார்கள். இதைப் படிப்பவர்கள் படிக்கும்போதே நாடகமேடையில் நாடகம் நடிக்கும்போது கண்ணுற்று அடையும் ஆநந்தத்தை அடைவார்கள் என்பதற்கையமில்லை. அநேக நாடக சபையாரால் நடத்தப்பட்டும் வருவதாம். இது ஜடாவல்லவர், பானுமதி, வனஜாக்ஷி, ஸ்நேஹலதா, முதலான புத்தகங்களெழுதிய வரகவி. திரு அ. சுப்பிரமணிய பாரதியாரவர்களா லியற்றப்பட்டது.

விலை அணா 8.

சுந்தரவல்லி.

இஃது

வரகவி. திரு. அ. சுப்பிரமண்ய பாரதியார் எழுதியது.

தற்காலம் ஆங்கிலங்கற்றுத் தமிழ்ப்பாஷையில் விருப்பின்றி யிருப்பாருக்கு ஹஸ்த பூஷணமாக விளங்குவது தமிழ் நாவல்கள் என்பது யாவரும் நன்கறிந்த விஷயம். அந்த நாவல்கள் நீதி, நன்னடக்கை முதலியன புகட்டக்கூடியனவாக விருப்பின் விசேஷமன்றோ? அவ்விதகுணங்களமைந்தது சுந்தர வல்லி என்னும் இத்தமிழ்நாவல். படிக்கப்படிக்க இன்பந்தருவது இது. மேன்மேலும் படிக்கவேண்டு மென்னும் அவாவையுங்கொடுப்பது. இன்னும் இதில்சுந்தரவல்லியென்னும் பெண் தான் கோரியகணவனை அடையும் அதிசயமும், நன்னடக்கையும், பாலசுந்தரத்தின் நற்குணமும், மதனஸேனனுவின் ஆச்சரிய சரிதமும், பாலசுந்தரத்தின் சிநேகிதனான ஒரு மித்ரத்துரோகி யடையும் கதியும், சுந்தரவல்லி, பாலசுந்தரம் இவர்கள் இன்புற்றுவாழ்வதும் வெகு ரம்யமாயிருக்கும். விலை அணு 8.

மங்களாம்பாள்.

இரண்டாம்பதிப்பு.

இது படிப்போர் மனதுக்கு இன்பந் தரத்தக்க இனிமையான சரித்திரம். தேனும் பாகும் கலந்ததெனச் சொல்லத்தக்க இனிய மொழிகளைக் கொண்டு சிறுவர்களும் படித்தறியக்கூடிய தமிழ் நடையில் எழுதியுள்ளது. இதில் பக்திரசம், ஜீவகாருண்யம், பொருமை, தயை முதலிய உத்தமகுண விசேஷங்களும், செல்வச்செருக்குற் றிழிவுருதல், அகங்காரத்தா லழிதல், நன்றி மறத்தல் முதலாய பல தூர்க்குணங்களினுல் விளையும் தீங்குகளும், படிப்பவர்கள் நன்குணர்ந்து நல்வழிப்பட்டுய்யுமாறு விளக்கியுள்ளன. இச்சரித்திரம் விஜயலக்ஷ்மி, சுப்பிரமணியர் தோத்திரக்கொத்து, யோகினி ஜாலக்கதை முதலிய புஸ்தகங்களை இயற்றிய பாலசரஸ்வதி தேவ சுந்தரி அம்மாள் என்பவரால் இயற்றப்பட்டது.

எல்லாம் ஒன்றே

இதில் (1) ஒன்று (2) நீ, (3) கடவுள் (4) சாந்தம் (5) செயல் (6) அகம்பாவம் என்ற அறிய பெரிய விஷயங்கள் பிரம்ஸ்ரீ வையை ஆர் சுப்ரமணிய அய்யரவர்களால் விவரித்து எழுதப்பட்டு கிளேஸ்காகிதத்தில் அழகாக பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. பாக்கெட் சைஸ் விலை அணு 2.

சுப்பிரமணியர் ஸ்தோத்திரக் கொத்து.

இப்புஸ்தகத்தில் நூறு பாடல்கள் அடங்கியுள்ளன. அதாவது, பத்து விதமான பதிகங்கள், இப்பத்து பதிகங்களும் திருச்செந்தில், திருவேரகம் முதலாகிய ஆறு படை வீடுகளிலும் விளங்கா நின்ற ஆண்டவன் மேற்பாடியுள்ளது. ஒவ்வொன்றிலும் பக்திப்பிரவாகத்திலிருந்து உண்டாகி அமுதமெனப் பகரத்தக்க சொல்லும், பொருளும், சுவையும் அமைந்துள்ளன. இதனை இயற்றியவர் தேவகுஞ்சரியம்மாள் என்னும் ஒரு பிராமண மாது. இந்த அம்மாள் தமக்கு நேர்ந்த ஒரு கொடிய நோய் தீரும்பொருட்டு இப்பதிகங்கள் பாடிச் சௌக்கியமடைந்தமையால் இதனை வெளியிடலானோம். பக்திமான்கள் யாவரும் இப்புஸ்தகத்திலொன்று வாங்கிப் படித்து ஆண்டவனைத் துதித்து அவர் கருணைக்குப் பாத்திரவான்களாவார்களென நம்புகின்றோம். இதில் ஆண்டவன் திருவுருவப்படம் ஒன்று முன்பக்கத்தில் அமைத்துள்ளது. இது பாக்கெட் சயிஸ் அளவுள்ளது. விலை அணா 3.

The Essense of Sutha Samhitha in Prose.

ஸூதஸங்கிதா ஸாராம்ருத வசனம்.

இப்புஸ்தகம் இதுகாறும் வசன நடையில் எழுதப்படவில்லை. அக்குறையை நிவர்த்தித்தற் பொருட்டும் யாவரும் எளிதில் படித்துப் பயன் பெறுமாறும் சுருக்கமாய்த் தமிழில் வெளிப்படுத்தப் பட்டிருக்கிறது. இந்த நூலை ஸ்ரீமத்-சங்கராசாரியர் பதினெண்முறை படித்துப் பிர்மஸூத்ர பாஷ்யத்தைச் செய்தனரெனின், இதன் பெருமையைக் கூறவும் வேண்டுமோ? இதில் பிர்மகீதை, ஸூதகீதை முதலிய அருமையான விஷயங்கள் அடங்கி யிருக்கின்றன. விலை ரூபாய் 1.

ஹேமலதா :

நவரசங்களுடன் கூடியதோர் நாடகம் விலை ரூ. 1 0 0

P. R. RAMA IYAR AND CO., PRINTERS, MADRAS

Books Approved by the Text Book Committee.

துரைத்தனத்தாரால் அங்கிகரிக்கப்பட்ட புத்தகங்கள்.

I. KNOWLEDGE IS POWER.

புத்திமானே பலவான்.

இது ஒரு லோபியையும் இரண்டு சகோதரர்களையும் பற்றிப்பேசுமொரு நாவல். இதில் சகோதர வாஞ்சை, கல்வி, ஒழுக்கம், உளுத்தகுணம், செல்வம், ஈகை, மானம், கர்வம் இவைகளாலுண்டாகும் நன்மை தீமைகள் முதலியன ஆன்றோர் மேற்கோள்களுடனும், தக்க முதுமொழிகளுடனும் மாணவர்கள் வியாஸமெழுதப் பேருதவியளிக்குமாறு நன்கு விளக்கப்பட்டிருக்கின்றன. கதாநாயகன் தன் புத்திசாதுர்யத்தினால் புத்திமானே பலவான் என்பதை நிலைநிறுத்துவது புத்திபுகட்டச்கூடியதாயும், வேடிக்கையாயும் வினயமாயுமிருக்கும். இதில் பெண் வர்ணனை என்பதே கிடையாது. விலை அணா. 0—6—0

II. BHARATHA, THE DUTIFUL.

பரதன்.

இது, வால்மீகி ராமாயணத்திலிருந்து பாத பாதுகா பட்டாபிஷேக மென்னும் பாகத்தை மாத்திரம் தனியே பிர்மஸ்ரீ வரகவி. திரு. அ. சுப்ரமண்யபாரதியாரவர்களால் சிறுவர், சிறுமியர் படித்துப்பயன் பெறுதற்பொருட்டுச் செவ்விய நடையில் எழுதப்பட்ட சிறு புத்தகம். இதில் ஸத்யம் தவறாமை, பிதிர் வாக்ய பரிபாலனம், சகோதரவாஞ்சை, ராஜநீதி, பதிபக்தி, உலக நடைக்குரிய தருமங்கள் முதலியன, அநேகவித நியாயங்களுடனும் கம்பராமாயணத்திலிருந்து, தெருட்டப்பட்ட முக்யமான மேற்கோள்களுடனும், முதுமொழிகளுடனும் இனிது விளக்கப்பட்டிருக்கின்றன.

III. THE CARNATIC FAIRY TALES.

யேகினி ஜாலக்கதை.

இதில் தெய்வபக்தி, மாதுருபக்தி, பிதிர்பக்தி, சகோதரநேசம், ஜீவகாருண்யம், நீதிசம்பந்தமான விஷயங்கள், பெண்களுக்குரிய கற்புடைமை, பலவகையான நீதிகள் முதலிய வற்றை விளக்கிக்காட்டும் ஐந்து

சிறுகதைகள் மனத்திற்கு மகிழ்ச்சிதருமாறு எழுதப்பட்டிருக்கின்றன. இது கல்வியபிவிருத்தியிலும் சிறுவர்களுக்குப் பெரும் பயனளிக்குமென்பதற்கையமில்லை. அணு 0-4-0

IV. BHAKTHICHANDRIKA. No. 1.

பக்தி சந்திரிகா. நெ. 1.

ஸ்ரீமதி:—இது பக்தியைப் புகட்டக்கூடியதோர் சிறிய கதை. இதில் பகவானையே பதிபாக அடைய வேண்டுமென்று பக்தி செய்துவந்த ஸ்ரீமதி என்னும் ஒரு பெண்ணை விரும்பிய இரண்டு முனிவர் குரங்குருபமடைவதும், சுயம்வர மண்டபத்தில் அவர்களுக்கிடையே ஜகத்ரக்ஷகராகிய மகாவிஷ்ணு சுந்தர வடிவத்துடன் தோன்றுவதும், அப்பெண், பகவானுக்கு மாலையிடுவதும், முனிவர்கள் ஸ்ரீமதியால் அவமதிக்கப்படுவதும் அதியற்புதமாயிருக்கும். பரந்தாமன் பக்திக்குக் கட்டுப்பட்டவர் என்பது இக்கதையால் நன்கு விளங்கும். சிறுவர் சிறுமியர் படிக்க மிகவும் பயன்பெறுவார்கள். நடை வெகு சுலபமானது. விலை அணு. 0—1—6

V. NALACHAKRAVARTHI.

நளச்சக்ரவர்த்தி.

ஐந்தாம் வேதமாகிய மகா பாரதத்திலிருந்து நள மகாசக்ரவர்த்தியின் சரித்திரம் அரங்கில் (Stage) நடித்தற்கு ஏற்ற நாடகரூபமாக, தக்க இடங்களில் செய்யுட்களுடனும், கீர்த்தனங்களுடனும் பிர்ம்ஹஸ்ரீ வையை-ஆர். சுப்ரமண்ய அய்யரவர்களால் எளிய நடையில் எழுதப்பட்டிருக்கின்றது. இதில், தெய்வபக்தி, ராஜதர்மம், பெண்கல்வி, கைத்தொழில் முதலிய பல விஷயங்கள் ஆங்காங்கு பிரஸ்தாபிக்கப் பட்டிருக்கின்றன. விலை அணு. 0—4—0

3505

விலாசம்:

ஸ்ரீபாலசுப்ரமண்யம் கம்பெனி,

திருவல்லிக்கேணி, சென்னை.